1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் இன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தகவல்களையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களையும் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் கம்பனியின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை (எஸ்எல்எ∴ப்ஆர்எஸ்./எல்.கே.ஏ.எஸ்.)

இணங்காமைக்குரிய கணக்கீட்டு நியமத்தின் விபரம்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆவது பிரிவின் படி, 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஏறத்தாழ ரூபா 883.88 மில்லியன் கிரயமான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தை மறு மதிப்பீடு செய்யாமல் கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.	மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாளில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்யவும், பொருத்தமான பிரிவுகளில் சொத்துக்களை மதிப்பிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார ஆயட்காலத்தை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) நிறுவனத்தின் உள்ளக பிரிவுகளுக்கு இடையில் நிகழும் கொடுக்கல்	அந்தப் பொருட்கள் மேலும் விசாரிக்கப்பட்டு அடுத்த ஆண்டு	நிறுவனத்தின் உள்ளக

வாங்கல்களை நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது ஒப்பிட்டு சரிசெய்வதன் மூலம் நிதி அறிக்கைகளை நியாயமாக சமர்ப்பிப்பது தொடர்பில் கம்பனியின் நிர்வாகம் கவனம் செலுத்தியிருக்க வேண்டிய போதிலும், வர்த்தக செலுத்த வேண்டியவை, செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் வர்த்தக பெறத்தக்கவைகளான முறையே ரூபா 64.85 மில்லியன், ரூபா 28.42 மில்லியன் மற்றும் ரூபா 26.54 மில்லியன் தொகைகள் கம்பனியின் பெயரிலேயே உள்ளடக்கப்பட்டிருந்தன.	முறையாகக் கணக்கிடப்படும்.	பிரிவுகளுக்கு இடையில் நிகழும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) நிறுவனத்தின் தள அலுவலகங்களுக்கு இடையே நிகழும் உள்ளக கொடுக்கல் வாங்கல்களான ரூபா 27.71 மில்லியன் உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் பிற வருமானத்தின் கீழ் கணக்கிடப்பட்டுள்ள மையால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வருமானம் அந்தத் தொகையால் மிகைப்படுத்தப்பட் டுள்ளது.	அடுத்த ஆண்டு முறையாகக் கணக்கிடப்படும்.	நிறுவனத்தின் உள்ளக பிரிவுகளுக்கு இடையில் நிகழும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) 2024 ஜனவரி இல் நடைபெற்ற வருடாந்த இருப்பு மற்றும் சொத்து சரிபார்ப்பின் போது, தெற்கு மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறையில் உள்ள செயற்திட்ட பிரிவுகளுக்குச் சொந்தமான பல்வேறு இருப்புக்கள் மற்றும் சொத்துப் பொருட்கள் அதிகமாக இருப்பது தெரியவந்ததுடன் ஏலங்கள் மற்றும் பிற நடவடிக்கைகள் மூலம் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் கம்பனியின் வள திட்டமிடல் (ERP) அமைப்பில் உள்ளடக்கப்பட் டுள்ளன. மேலும், பல சொத்துப் பொருட்களில் பற்றாக்குறைகள் இருந்தன. இருப்பினும், அந்த அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகளின் நிதிசார் பெறுமதிகள் அந்த அமைப்பில் சீராக்கப்பட்டு நிதி அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை.	பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு, தொடர்புடைய பொருட்கள் எதிர்காலத்தில் கணக்கிடப்படும்.	அதிகப்படியான மற்றும் பற்றாக்கு றைகளின் நிதிசார் பெறுமதிகளை ERP அமைப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும்.
(ஈ) முந்தைய ஆண்டுகளில் அகற்றப்பட்டவற்றுடன் தொடர்புடைய அதிகப்படியான தேய்மான சரிசெய்தல்களைச் சேர்த்ததன் காரணமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான பிற வருமானத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 2.74 மில்லியன் சொத்துக்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் இலாபமானது ரூபா 1.69 மில்லியனால் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.	மொத்த தேய்மானச் செலவோடு ஒப்பிடும்போது இந்தச் சரிசெய்தல் மிகக் குறைந்த தொகை என்பதால், அது தொடர்புடைய ஆண்டிற்கு சரிசெய்யப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டுக்கு உரித்தற்ற சொத்து அகற்றல் இலாப த்தை முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

விடயம்	நிதிக் கூற்றுக்களின் படி	தொடர்புடைய பதிவேட்டின் படி	வேறுபாடு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.		
(அ) வியாபாரக் கடன்கொடுத்தோர்	62.16	53.20	8.96	தாய் நிறுவனத்திற்கான கணக்கீட்டில் காணப் படும் இந்த வேறுபாடு எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்.	தொடர்புடைய தரப்பினருடன் சம்பந்தப்பட்ட பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைகளை ஒப்பிட்டு, சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ) செலுத்த வேண்டிய வேலை தொடக்க முற்பணம்	2,242.95	2,239.57	3.37	தாய் நிறுவனத்திற்கான கணக்கீட்டில் காணப் படும் இந்த வேறுபாடு எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்.	தொடர்புடைய தரப்பினருடன் சம்பந்தப்பட்ட பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைகளை ஒப்பிட்டு, சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 3,049.96 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 313.43 மில்லியன் மற்றும் ரூபா 152.85 மில்லியன் தொகைகள் முறையே 03 - 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகக் காணப் பட்ட போதிலும் அந்த நிலுவைகளை இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்ககப்பட்டிருக்கவில்லை.	கடன்பட்டோரிடமிருந்து மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	நிலுவையாகவுள்ள மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பிடிகாசு ரூபா 3,051.27 மில்லியன் ஆகும். அதில் ரூபா 514.87 மில்லியன் மற்றும் ரூபா 490.75 மில்லியன் தொகைகள் முறையே	பிடி காசு மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளன	பெறவேண்டிய பிடிகாசு மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு ஒப்பந்த உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் அறவிப்படாதுள்ளன.

1.6.2 செலுத்த வேண்டியவை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,671.90 மில்லியன் கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 400 மில்லியன் தொகை 2 முதல் 5 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது.	கடன்பட்டோரிடமிருந்து நிலுவையில் உள்ள பணத்தை வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு பணம் கிடைத்தவுடன் கடன்கொடுத்தோருக்கு பணம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	செயற்பாடுகளைத் தொடரந்து மேற்கொள்வதற்காக செலுத்த வேண்டிய நிலுவைகளை விரைவாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 875.45 மில்லியன் செலுத்த வேண்டிய பிடிகாசுத் தொகையில் ரூபா 434.44 மில்லியன் தொகை 2 முதல் 5 ஆண்டுகளாகவும் ரூபா 189.67 மில்லியன் தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டன.	கடன்பட்டோரிடமிருந்து நிலுவையில் உள்ள பணத்தை வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு பணம் கிடைத்தவுடன் கடன்கொடுத்தோருக்கு பணம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	நிலுவையில் உள்ள மீதிகளை உடனடியாகத் தீர்க்க பொருத்தமான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

1.7 உறவுமுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் தாய்க் கம்பனியான மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்குச் செலுத்த வேண்டிய மீதியொன்றாக ரூபா 1,569.40 மில்லியன் தொகையை கம்பனி காண்பித்திருந்ததுடன், இந்த மீதி தொடர்பில் இரு தரப்புக்கும் இடையே நாளதுவரையாக்கப்பட்ட உடன்படிக்கை எதுவும் காணப்படாததுடன் இந்த மீதியை தீர்ப்பது தொடர்பில் இரண்டு நிறுவனங்களினதும் முகாமைத்துவத்தால் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நாட்டில் நிலவிய பாதகமான நிலவரம் காரணமாக செயற்திட்டங்களின் காசுப் பாய்ச்சல் மீது மோசமான விளைவை ஏற்படுத்தியமையால் கம்பனிகளுக்கு இடையிலான மீதி அதிகரித்துள்ளது. மேலும், தற்போது நீண்டகாலமாக நிலுவையிலுள்ள மீதிகளை கம்பனி மீளாய்வு செய்து பங்குகளை வழங்குவதன் மூலம் இந்த மீதியை மூலதனமாக்குவதற்கான வழிமுறையை கண்டறிவதற்காக பணியகத்துடன் கலந்துரையாடப்படுகின்றது.	கம்பனிக்கும் தாய்க் கம்பனிக்கும் இடையே தெளிவான இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கும் செலுத்த வேண்டிய மீதியை வெளிப்படுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்			
38(1)இ மற்றும் 38(2) ஆம் பிரிவு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஒரு பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு நிறுவப்பட்டு பராமரிக் கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டுமென்பதுடன் அந்த அமைப்பின் செயல்திறனை மதிப்பாய்வு செய்து அமைப்பின் பயனுள்ள செயல்பாட்டை உறுதி செய்வதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்தலும் வேண்டும். இந்த மதிப்பாய் வானது எழுத்துப்பூர்வமாக இருப்பதுடன் அதன் நகல் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஒரு ERP கட்டுப்பாட்டு அமைப்பு 2018 ஜனவரி 01 முதல் பராமரிக்கப்படுவதுடன் அந்த அமைப்பின் செயல்திறன் மதிப்பாய்வு செய்யப்படும்.	கணக்காய்வுச் சட்டத்தின் விதிகளின்படி, உள்ளகக் கட்டுப்பாடுகளின் எழுத்துப்பூர்வ மதிப்பாய்வுகள் நடத்தப்பட்டு அதன் நகல் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையால் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கையேடு			
(i) 4.3(iii) ஆம் பந்தி	கம்பனியால் அனைத்து இருப்புப் பெறுவனவுகள் மற்றும் விநியோகத்தை நிர்வகிக்க ஒரு முறையான இருப்பு முகாமைத்துவக் கட்டமைப்பை பராமரிக்க வேண்டியிருந்த போதிலும், நிறுவனம் பயன்படுத்தும் நிறுவன வள திட்டமிடல் (ERP) அமைப்பு முறையான காலப் பகுப்பாய்வு அறிக்கைகளை உருவாக்கும் திறன் கொண்டதல்ல, எனவே, காலாவதியான, மெதுவாக நகரும் மற்றும் நகராத பொருட்களை அடையாளம்	ERP அமைப்பின் மூலம் இருப்பு மீதிகளின் காலப் பகுப்பாய்வைப் பெற முடியாவிட்டாலும், அனைத்து காலாவதியான சரக்குகளும் வருடாந்திர கிடங்கு சரக்கு கணக்கெடுப்பின் போது ஒரு சுயாதீன தரப்பினரால் கண்காணிக்கப்படும் மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	இருப்பு முகாமைத்துவத்திற்காக ஒரு முறையான இருப்பு முறையை (ERP) அறிமுகப்படுத்த நிறுவனம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	காண முடியவில்லை.		
(ii) 3.2 மற்றும் 3.4 ஆம் பந்திகள்	பல்வேறு பதவிகளுக்கு பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்பு நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமும் இருக்க வேண்டிய போதிலும், அத்தகைய நடைமுறை மற்றும் திட்டம் 2025 மார்ச் 31 வரையிலும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு, அதற்கான ஒப்புதலை விரைவாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 5.4.4 (iii) ஆம் பந்தி	ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணமானது ஒப்பந்தத் தொகையில் 90 சதவீத நிலுவைத் தொகை செலுத்தப்படுவதற்கு முன்பு முழுமையாக வசூலிக்கப்பட வேண்டிய போதிலும், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி 06 தள அலுவலகங்களில் 90 முதல் 100 சதவீதம் வரை திட்டப் பணிகள் நிறைவடைந்த 16 திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 376.67 மில்லியன் மொத்த முற்பண நிலுவைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	இறுதி சிட்டைகள் சான்றளிக்கப்படாமை, தொடர்பில்லாத திட்டங்களை முடித்தல், திட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் போன்ற காரணங்களால் இந்த நிலுவைகள் உள்ளன, மேலும் அவை எதிர்காலத்தில் வாடிக்கையாளருடன் தீர்க்கப்படும்.	குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி பணிக்கான முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் தொடர்புடைய சிட்டைகள் சான்றளிக்கப்படும் நடவடிக்கைகளும் தாமதமின்றி முடிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 664.09 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் ரூபா 302.70 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபம் ஒன்று காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 361.39 மில்லியன் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிர்மாண வருமானம் ரூபா 1,869.22 மில்லியனாலும், வாடகை வருமானம் மற்றும் நில அலங்காரமிடல் வருமானம் முறையே ரூபா 2.30 மில்லியன் மற்றும் 26.92 மில்லியனாலும் அதிகரித்திருந்தமையே நிதி விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குகள் மீதான பகுப்பாய்வு

விபரம்	மீளாய்வாண்டின் பெறுமதி	முன்னைய ஆண்டின் பெறுமதி	முரண் {சாதகம் / (பாதகம்)}	மாற்றத்தின் சதவீதம்
	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.	%
வருமானம்				
நிர்மான மற்றும் மதியுரை வருமானம்	8,724.15	6,854.08	1,870.07	27
நிதி வருமானம்	481.29	701.36	(220.07)	31
செலவினம்				
விற்பனைக் கிரயம்	7,666.06	6,383.50	1,282.56	20
விற்பனை விநியோக செலவினம்	1.99	14.96	(12.97)	87
நிதிக் கிரயம்	7.76	15.36	7.60	49

2.3 விகிதப் பகுப்பாய்வு

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மொத்த இலாப வீதம் 12.13 சதவீதமாக இருந்ததுடன், இது முந்தைய ஆண்டை விட 77 சதவீதம் அதிகமாகும். மேலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிறுவனம் அதன் மொத்த சொத்துக்களான ரூபா 15,081 மில்லியனைப் பயன்படுத்தி ரூபா 664 மில்லியன் வரிக்கு முந்தைய இலாபத்தைப் பெற்றது. எனவே, மொத்த சொத்துக்களின் சராசரி வருமானம் 4.4 சதவீதமாக இருந்தது. எதிர்வரும் காலகட்டத்தில் செயல்பாட்டு இலாபத்தை மேலும் அதிகரிப்பதற்காக கம்பனியின் வளங்களைப் பயன்படுத்துவதை எவ்வாறு என்பது குறித்த மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்து செயல்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) கம்பனி மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபை என்பன ஒருங்கிணைந்து மேற்கொண்டிருந்த பல்லேகலே மற்றும் கொத்மலை பண்ணைகளிற்காக பொலிடனல் இல்லங்களை அறிமுகப்படுத்தல் செயற்திட்டம் தொடர்பில் இரு தரப்புக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், கோழி வளர்ப்புத் திட்டத்திற்காக 2025 ஏப்ரல் 09 அன்று ஒரு கூட்டு முயற்சி ஒப்பந்தம் (Joint Venture Aggreement) செய்யப்பட்டது. ஒப்பந்தத்தின்படி, முதல் 06 ஆண்டுகளில் நிகர இலாபத்தில் 70 சதவீதத்தை கம்பனியுடனும், 30 சதவீதத்தை தொடர்புடைய நிபந்தனைகளின் கீழ் அதிகாரசபையுடனும் பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டது. 2024 டிசம்பர் 31 ஆம்	நிறுவனத்திற்கும் ஹமபிம அதிகாரசபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கருத்திற் கொள்கையில் அது SLFRS 11 கணக்கீட்டு நியமத்தின் கீழ் கணக்கிடப்பட வேண்டும். மேற்கூறிய நியமத்தின் கீழ் கணக்கிடுவதில், இரு தரப்பினருக்கும் இடையே ஒரு செல்லுபடியாகும் ஒப்பந்தம் இருப்பது அவசியமாவதுடன் இரு தரப்பினரும் 2025 ஏப்ரல் 09 வரை ஒரு உடன் பாட்டை எட்ட முடியாததா	செயற்திட்டம் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே முறையான ஒப்பந்தத்தை எட்டவும், அதற்கேற்ப இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளவும், நிதிநிலை அறிக்கைகளில் அதை வெளியிடவும் நடவடிக்கை

தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகளின்படி ஹதபிம அதிகாரசபை ரூ. 3.56 மில்லியன் நிகர இலாபத்தை ஈட்டியிருந்தாலும், ஒப்பந்தத்தின்படி கம்பனிக்கு எந்த இலாபமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்தத் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக நிதி அறிக்கைகளில் எந்த வெளிப்படுத்தல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.	லும், நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செல்லுபடியாகும் கூட்டுக் கட்டுப்பாடு இருப்பதை அடையாளம் காண முடியாததாலும், மேற்கூறிய திட்டத்திற்காக நிறுவனம் செலவழித்த ரூபா 87.39 மில்லியன் தொகை நடைபெற்று வரும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.	எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) 2019 ஆம் ஆண்டு இரத்தினபுரி மாவட்டத்தில் 60 பேர்ச்சஸ் நிலத்தை 30 வருட குத்தகை அடிப்படையில் கையகப்படுத்துவதற்கான முறையான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல், நிறுவனம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 15.43 மில்லியன் குத்தகை வாடகையை செலுத்தியிருந்ததுடன் சபரகமுவ தலைமை அலுவலகத்திற்கான கட்டிடம் இந்த நிலத்தில் கட்டப்பட்டிருந்தது. சட்டப்பூர்வ நிலையைப் பொருட்படுத்தாமல், குத்தகைப் பணத்தை செலுத்தி, முறையான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் கட்டுமானத்தை மேற்கொள்வது ஆபத்தான மற்றும் சர்ச்சைக்குரிய சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.	நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இந்த குத்தகைப் பத்திரத்தை பூரணப்படுத்துவதற்காக, இந்த நிலம் உட்பட 348 ஏக்கர் கொண்ட நிலத் திட்டங்களுக்கு அரசாங்க நில கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6 (1) இன் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இலவச மானிய ஆவணங்களைப் பெற வேண்டும். மேற்கண்ட நடவடிக்கைகள் முடிந்த பிறகு இந்த குத்தகைப் பத்திரத்தை பூரணப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	கம்பனி மொத்த குத்தகை வாடகையையும் செலுத்தியுள்ளதால், தொடர்புடைய ஒப்பந்தத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் விரைவில் கையெழுத்திடப்பட வேண்டும்.
(இ) ரம்பகன் ஓயா திட்டம் ஆரம்பத்தில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அது கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது, ஆனால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதிக்குள் இந்த ஒப்படைப்பு செயல்முறை முறையாக முடிக்கப்படாததால், அந்த நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானம் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட சொத்துக்களின் பெறுமதி பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளது.	இந்த விவசாயத் திட்டம் ஆரம்பத்தில் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த திட்டத்திற்காக ரூபா 17.28 மில்லியன் செலவு செய்யப்பட்டது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் புத்தகங்களில் இந்தத் தொகையைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் செயல்முறை முறையாக முடிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டுரீதியான வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, நிறுவனம் 2024, 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முழுமையாக முடிக்கப்பட்ட கட்டுமானத் திட்டங்களிலிருந்து முறையே ரூபா 745.47 மில்லியன், ரூபா 942.90 மில்லியன் மற்றும் ரூபா 667.42 மில்லியன் செயற்பாட்டு நட்டங்களைச் ஈட்டியிருந் ததுடன் 203 நடந்து கொண்டிருக்கும் கட்டுமானத் திட்டங்களில் 35 திட்டங்களால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மொத்தம் ரூபா 444.49 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. நட்டம் ஏற்படும் சூழ்நிலைக்கான காரணங்களைக் கண்டறிந்து, நடந்து கொண்டிருக்கும் கட்டுமானத் திட்டங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் கண்காணிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், இது நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பையும் பாதிக்கின்றது.	திட்டங்களை முடிக்க மதிப்பிடப்பட்டதை விட அதிக நேரம் எடுத்துக்கொண்டமை, மதிப்பிடப்பட்ட செலவை விட அதிகமான பொருள் செலவு கள், அதிக மேந்தலை செலவுகள், நேர நீட்டிப்பு ஒப்புதல்களைப் பெறுவதில் தாமதம், தொற்றுநோய் நிலைமை, பணம் செலுத்து வதில் தாமதம் போன்றவை இதற்கு வழிவகுத்தது.	ஒப்பந்தச் செலவு அதிகரிப்பைத் தடுக்கவும், சரியான நேர முகாமைத்துவம் மூலம் கட்டுமானத் திட்டங்களிலிருந்து போதுமான இலாபத்தைப் பெறவும் நிர்வாகம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
தெற்கு மாகாண தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் கடமைகளை முறையாகப் பிரிக்காமை, ERP கடவுச்சொற்களின் இரகசியத்தன்மை இல்லாமை மற்றும் உள்ளக் கட்டுப்பாட்டில் உள்ள பலவீனங்கள் காரணமாக, களஞ்சிய உதவியாளராகப் பணிபுரிந்த ஒரு அதிகாரி, 2021 ஜனவரி 01 முதல் 2024 ஜூன் 13 வரையிலான காலகட்டத்தில் நிறுவனத்திற்குச் சொந்தமான நான்கு வங்கி நடப்புக் கணக்குகளில் இருந்து மொத்தம் ரூபா 50.06 மில்லியனை மோசடியாக எடுத்துள்ளதாக கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் நியமிக்க ப்பட்ட முதற்கட்ட விசாரணைக் குழு கண்டறிந்தது. இதில், ரூபா 0.44 மில்லியன் மூன்று சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந் ததுடன் மொத்தம் ரூபா 49.62 மில்லியன் நிறுவனத்திற்கு இன்னும் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், இந்தத் தொகையை அறவிட்டு, பொறுப்பான தரப்பினருக்கு எதிராக சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நிறுவனம் உடனடி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2024 நவம்பர் 01 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கம்பனி தாக்கல் செய்த புகார் தொடர்பாக, 2025 ஜனவரி 28 அன்று முதல் நினைவூட்டல் அனுப்பப்பட்டது. அதன் பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கம்பனியை வரவழைக்க தேதி வழங்கி யது. அதன்படி, மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	விசாரணைகளை விரைவுபடுத்த உடனடி நடவடிக்கைகளை எடுப்பதுடன் பொறுப்ப ான தரப்பினரிடமிருந்து இழப்புகளை மீட்டெடுக்க முறையான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கையை முகாமைத்துவம் எடுக்க வேண்டும்.